முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.165/2004**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 02.04.2026 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 02.04.2026 | சாட்சி | பி.வா.சா.3 |
| பெயர் | காமராஜ் | வயது.. | 44 |
| தந்தை பெயர்.. | வெங்கடேசன் | ஊர் .. | பு.உடையூர் கிராமம் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. நான் விவசாய கூலி வேலை செய்கிறேன் நான் வசிக்கும் உடையூர் கிராமத்திற்கும் புவனகிரிக்கும் சுமார் 6 கி.மீ தொலைவு இருக்கும். எனது உடையூர் கிராமத்தில் மாசி மகம் விசேஷமானது தான் மாசி மகத்தில் நாள் முழுவதும் காவடி எடுப்பது போன்ற திருவிழா இருக்கும். நான் எனது கிராமத்தில் மாசி மக திருவிழாவில் கலந்துக்கொள்ள மாட்டேன். எதனால் கலந்துக்கொள்ள மாட்டேன் என்றால் மாசி மக நாளுக்கு 2 நாள் முன்பே வந்து வேலை செய்துவிட்டு சென்று விடுவேன். எனது உடையூர் கிராமத்திலும், புவனகிரியிலுமே இரண்டு ஊர்களிலும் கலந்துகொள்வேன். கடைசியாக மாசி மகத்தில் திருவிழா தேதி ஞாபகம் இல்லை. கடைசியாக புவனகிரியில் நடந்த மாசி மக திருவிழாவில் நான் கலந்து கொள்ளவில்லை. புவனகிரி மாசி மக திருவிழாவில் கடைசி 7 வருடமாக கலந்து கொள்ளவில்லை. 7-8 வருடமாக மாசி மகத்திற்கும் இரண்டு நாள் முன்பு வந்து செய்து கொடுக்கும் வேலையையும் செய்யவில்லை.

2. 1ம் பிரதிவாதி ஸ்ரீராமனுக்கும் எனக்கும் எப்படி பழக்கம் அன்றால் பிரஸ் வைத்துள்ளார் சுமார் 20 ஆண்டுகாலமாக பழக்கம். ஸ்ரீராமன் பூவராகசாமி வர்த்தக சங்கம் வைத்து நடத்தி வருகிறார். 7 ஆண்டுகளுக்க முன்பு மாசி மக திருவிழாவிற்கு வேலை செய்த போது பூவராக சாமி வர்த்தக சங்கம் உறுப்பினர்கள் வந்திருந்தார்கள் ஆனால் பெயர்கள் குறிப்பிட முடியாது, சுமார் 200-300 உறுப்பினர்கள் வந்திருந்ததார்கள். புவனகிரி வர்த்தக சங்கம் மாசி மக திருவிழா நடத்தி வருவது பற்றி

எனக்கு தெரியாது. புவனகிரி வர்த்தக சங்கம் என்று புவனகிரியில் ஒன்று நடத்தி வருவது பற்றி எனக்கு தெரியாது. பூவராகசாமி வர்த்தக சங்கத்தில் ஏற்பட்ட பிரச்சனையை 1ம் பிரதிவாதி தீர்த்து வைத்திருக்கிறார் . எப்போது யார் யாருக்கு நடந்த பிரச்சனையை கூறமுடியுமா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. மாசி மக திருவிழா எந்த இடத்தில் நடக்கும் என்றால் புவனகிரியில் 1ம்பிரதிவாதி பிரஸ்ற்கு மேற்கில் உள்ள மண்டபத்தில் நடக்கம் அந்த மண்டபம் யாருக்கும் பாத்தியமானது என்று தெரியாது.

3. printing press கட்டிடம் தவிர மற்ற கட்டிடத்தில் வாடகைக்கு இருக்கிறார்களா என்றால் இல்லை, இடிந்து இருக்கிறது., 1ம் பிரதிவாதி மட்டும் இருக்கிறார். கடந்து 7 ஆண்டுகளாக தான் கட்டிடம் இடிந்த நிலையில் உள்ளது அதற்கு முன்பு நன்றாக தான் இருந்தது , 7 ஆண்டுகளுக்கு முன்பு யார் வாடகைக்கு இருந்தார்கள் என்பதை பற்றி எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளை 1ம் பிரதிவாதி வழக்கறிஞரிடம் கூறினார் அதில் இருக்கும் விபரங்கள் எனக்கு தெரியும். முதல் விசாரணையில் உற்சவ மண்டபத்தில் திருவிழாவிற்கு முன்பு மண்டபத்தை இன்றுவரை சுத்தம் செய்து வருகிறேன் என்று கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி அழைத்து சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றால் சரிதான். நேற்றைக்குமம் இன்றைக்கும் நீதிமன்றம் வருவதால் இரண்டு தினங்களுக்கான தின கூலியை 1ம் பிரதிவாதி தருவதாக ஒத்துக்கொண்டாரா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.